செ.வெ.எண்.18 நாள். 11.04.2025

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

தேனி மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள **106 சமையல் உதவியாளர்** பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளது. வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அந்தந்த வட்டார அலுவலகங்களில் இனசுழற்சி வாரியாக தெரிந்து கொள்ளலாம்.

சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர்களாக பணிநியமனம் செய்யப்படுவோர் ஓராண்டு கால பணிக்குப் பின்பு, தொகுப்பூதியத்திலிருந்து சிறப்பு காலமுறை ஊதியம் (ஊதிய நிலை -1 (Level of Pay ரூ.3000--9000) வழங்கப்படும். இப்பணிக்கு 21 வயது முதல் 40 வயது வரை உள்ள பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க இயலும். வயது நிர்ணயம் அறிவிப்பு தேதியினை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்படும். நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைப்பட்ட தூரம் 3 கி.மீ-க்குள் இருக்க வேண்டும். (ஊராட்சி - குக்கிராமம்- வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக் கொள்ள தேவையில்லை.)

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும்போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மட்டும் விண்ணப்பிக்க தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

விண்ணப்பித்துடன் பள்ளி மாற்றுச் சான்றிதழ், SSLC மதிப்பெண் சான்றிதழ் (தோல்வி / தேர்ச்சி), குடும்ப அட்டை, இருப்பிடச் சான்று, ஆதார் அட்டை, சாதிச்சான்று போன்றவற்றின் நகல் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் (குறைவான பார்வைத்திறன்-மூக்குக் கண்ணாடி மூலம் சரி செய்யப்பட்டது, உடல் இயக்க குறைபாடு-ஒரு கால், குணப்படுத்தப்பட்ட தொழுநோய்-40% கைகளின் முழு செயல்பாட்டு திறன், உணர்திறன் மற்றும் செயல்திறன் உள்ளடக்கியது, திரவ வீச்சினால் பாதிக்கப்பட்டவர்கள், குறிப்பிட்ட கற்றல் திறன் குறைபாடு-மிதமான) அதற்கான சான்றிதழ்களின் நகல்களையும் இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகுதிகளை உடையோர் 15.04.2025 முதல் 26.04.2025 வரை (வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை) விண்ணப்பிக்கலாம்.

மேலும், இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு அந்தந்த ஊராட்சி ஒன்றிய அலுவலங்களை அணுகலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.

விண்ணப்பப் படிவம்

சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பம்

சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படத்தினை ஒட்டவும்

| மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம்/ மாநகராட்சி/ நகராட்சி | விண்ணப்பிக்கும் பள்ளி |
|---|---|---|
| | | |

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் | |
| தந்தை/கணவர் பெயர் | |
| கைபேசி எண் | |
| விண்ணப்பதாரரின் இருப்பிட முகவரி (குடும்ப அட்டையில் உள்ளபடி) மற்றும் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது | |
| ஊராட்சி ஒன்றியம்/நகராட்சியின் பெயர் | |
| கல்வித் தகுதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) குறைந்த பட்சம் 10 தோல்வி/தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழில் கட்டாயம் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். | |
| பிறந்த தேதி/ வயது | |
| சாதி மற்றும் உட்பிரிவு (வட்டாட்சியர் சான்று இணைக்கப்பட வேண்டும்) | |
| மாற்றுத்திறனாளி (ஆம் எனில் மாற்றுத் திறனாளி அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும்) | ஆம்/இல்லை |
| ஆதரவற்ற விதவை /ஆதரவற்ற பெண்/ கணவரால் கைவிடப்பட்டவரா? ஆம் எனில் (வட்டாட்சியரின் சான்று இணைக்கப்பட வேண்டும்) | ஆம் / இல்லை |
| பணியிடம் கோரும் மையம்/பள்ளியின் பெயர் | |

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் இருப்பிடத்திற்கும் பணியிடம் கோரும் மையத்திற்கும் இடைப்பட்ட தூரம் (மூன்று கிலோமீட்டருக்குள் இருத்தல் வேண்டும்) | |

நாள் :

இடம் : விண்ணப்பதாரர் கையொப்பம்

இணைப்பு

1. பள்ளி மாற்றுச்சான்றிதழ் நகல்
2. SSLC மதிப்பெண் சான்றிதழ் நகல்
3. குடும்ப அட்டை நகல்
4. ஆதார் அட்டை நகல்
5. சாதிச் சான்றிதழ் நகல்